

# தவத்திரு தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு 2013

27, 28 ஆடித்திங்கள் 2013

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் மற்றும்
யாழ்ப்பாண மறைமாவட்டம், யாழ்ப்பாணம்.

14) தொன்மை மிக்க தமிழர் பண்பாட்டைப் பேணும் மட்டக்களப்பு 118

கௌரி புண்ணியமூர்த்தி

15) ஈழம் கண்ட தனிப் பெருந் தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார் 132

சி.ரமேஷ்

16) இலங்கைப் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள்: பாலை நண்டுகள் தொகுதியை

முன்வைத்த ஓர் ஆய்வு 143

த.அஜந்தகுமார்

17) Nattiyak Kalai: Fr. Thaninayagam`s Perspective 153
Fr.N.Maria Xavier (Saveri)

18) இந்துக்களது வாழ்வியலில் அறம் 164
திருமதி விக்னேஸ்வரி பவநேசன்

19) மலையகத் தமிழ் நாவல்களின் அண்மைக்காலப் போக்குகள். 173

எஸ்.வை. ஸ்ரீதர்,

20) மட்டக்களப்பு மேற்குவலய மக்களின் வாழ்வியலுடன் இணைந்த பண்பாட்டு

அம்சங்கள் -ஏறாவூர்பற்று பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. 184
பொன்னுத்துரை நிலாந்தினி

21) சதகங்கள் புலப்படுத்தும் அறச்சிந்தனைகள் 195

திருமதி. ஜனகா சிவசுப்பிரமணியம்

22) தமிழிலக்கியத்தில் சமயம் கடந்த ஆன்மீகம் 201

யெயசேகரம்

23) ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தமிழ்மொழி வாசிப்புத்திறனும் சவால்களும் 214

திரு.க.கேதீஸ்வரன்

24) தமிழ்க் குறுங்காவியங்கள் வரிசையில் 'தகனம்' - ஓர் ஆய்வுநோக்கு 226

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

25) அர்ச் யாகப்பர் அம்மானை - ஈழத்தில் போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவ இலக்கியப்

பாரம்பரியத்தின் பிரதிபலிப்பு 232

ஹறோசனா – யேசுதாசன்

26) தமிழர் பண்பாட்டின் தொன்மையில் சம்ஸ்கிருதமொழியின் செல்வாக்கு -

மொழிபெயர்பியலூடான பார்வை - 245

திரு.ச.பத்மநாபன்,

# தொன்மை மிக்க தமிழர் பண்பாட்டைப் பேணும் மட்டக்களப்பு

கௌரி புண்ணியமூர்த்தி

பூர்வீக காலம் முதலாக தமிழர் செறிந்து வாழ்கின்ற இடமாக மட்டக்களப்பு விளங்குகின்றது. மட்டக்களப்புத் தமிழர்கள் உலகின் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களுடன் ஒப்பிடுகையில் ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ள போதிலும் சில அம்சங்களில் அவர்களிலிருந்து மாறுபட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். அந்தவகையில் தனித்துவ மிக்க மட்டக்களப்பாரின் பண்பாடு ஆராய் விற்குரியதாகும். 'பண்பாடு' என்பது பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியதாகும். அதாவது ஒரு இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், இலக்கிய மரபுகள், வீரம், அரசியலமைப்புகள், உணவு, பொழுது போக்கு, விளையாட்டு, திருவிழாக்கள், ஆடை அணிகலன்கள் யாவும் பண்பாட்டினுள் அடங்கும்.[1] தமிழர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டில் சிறந்திருந்தனர் என்பதை பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலிற்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர்.

மக்களியல் வல்லுநர்களின் (Anthropologists) கருத்தின் படி பண்பாடு என்பது பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத் துறைகளும் ஆகும்.[2] டி. எஸ். எலியட் (T. S. Eliot) எனும் ஆங்கிலப் புலவர் 'பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புக்கள்' எனும் நூலில். பண்பாடு என்பது இனிமையும், ஒளியும் என்றும், சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் கூறியுள்ளார். இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது" என்றும் திருக்குறளில் "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்றும் வருகின்றது.3 பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும், ஒழுக்கமுடையோரென்றும், மாசற்ற காட்சியுடையோரென்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் 'Culture' எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தீன் சொல்லாகிய 'Cultura Agri', அதாவது நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து பிறந்ததோ அதுபோல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர்கள் பயன் படுத்தியுள்ளனர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மீன்பாடும் தேன்நாடு என சிறப்பாகப்

போற்றப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே சித்தாண்டி எனும் அழகிய கிராமம் அமையப்பெற்றுள்ளது. மட்டக்களப்பு எனும் போது அது மிகப்பரந்த பிரதேசமாகும். ஆய்வில் தனித்துவமும் ஆழமும் பேணப் பட வேண்டுமென்பதற்காக தமிழர் பாரம் பரியங்களை இன்றுவரை பேணி வருகின்ற தொன்மைமிக்க ஊரான சித்தாண்டி ஆய்வுப் பரப்பாக்கப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு நகரின் வடக்கே சுமார் 19கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இதன் வடக்கே சந்தனமடு என்னும் ஆறும், தெற்கே மாவடிவேம்பு எனும் கிராமமும், கிழக்கே முறக்கொட்டாஞ்சேனை எனும் கிராமமும் அமைந்துள்ளது.

### *01.* வாழ்வியல்

வாழ்வில் நடந்தேறும் வழி வழியாய் வந்த பழக்க வழக்கங்களும், ஒழுகலாறுகளும் வழிபாட்டு முறைகளும் பல. அவைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம், குலத்திற்குக் குலம், ஊருக்கு ஊர் எனப் பல ஒன்றிணைந்தும் வேறுபட்டும் காணப்படுகின்றன. சித்தாண்டியைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பில் உள்ள ஏனைய ஊர்களுடன் ஒப்பிடுகையில் பொதுவான பண்பாட்டம்சங்களைக் கொண்டுள்ள போதிலும் தனித்துவமான அம்சங்களையும் பேணுகின்ற போக்கைக் காணமுடிகின்றது. அந்தவகையில் பிறப்பு முதல் இறப்பு வரையான சித்தாண்டி மக்களின் வாழ்வியற் கூறுகள் ஆராய்விற்குரியதாகும்.

### *1.1* பிறப்பு

மனிதன் பிறந்தது முதல் அவனது பண்பாடு சார்ந்த சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றில் கட்டுண்டு வாழத்தொடங்கிவிடுகின்றான். மட்டக்களப்பு தேசத்தவருக்கென்று பிறப்பின்போதுதான் தனித்துவமான சில பண்பாட்டம்சங்கள் காணப்படுகின்றன. சித்தாண்டியைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு தேசத்திற்குரிய பொதுவான அம்சங்களையே பிறப்புச் சடங்குகளில் அவதானிக்க முடிகின்றது. எனினும் இங்குள்ள சில பிரதேசங்களில் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்கள் சிலவற்றை சித்தாண்டியில் காணமுடியவில்லை.

#### *1.1.1* வெற்றிலை வைத்துக் கேட்டல்

மட்டக்களப்பு தேசத்தவர் தமது பிறப்பு முதல் வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சிகளிலும் சாத்திரம், சோதிடம் என்பவற்றில் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குகின்றனர். குழந்தை பிறந்து ஐந்து, ஏழு, ஒன்பதாம் நாட்களில் சோதிடரிடம் சென்று பிள்ளை பிறந்த திகதி, நேரம் கொடுத்து எதிர்காலம் பற்றிக் கணிப்பர். அதில் தாய், தந்தை, சகோதரர், மாமன், பேரன், பேத்தி முதலியோரது எதிர்காலம் பற்றியும் கூறப்படும். இதன் மூலம் பிள்ளையின் தேகாரோக்கியம் பற்றி அறியப்படும். அத்துடன் குழந்தைக்கு பெயர் வைக்கும் முதலெழுத்துக்களும் இதிற் கூறப்படும். இது 'வெற்றிலைவைத்துக்கேட்டல்' என இங்கு அழைக்கப்படுகின்றது. முற்காலத்தில் பெயர் வைத்தலில் சோதிடத்தின் செல்வாக்கு காணப்படவில்லை. வெறுமனே குழந்தை, உறவினர்களின் தேகாரோக்கியம் மட்டுமே அதில் கூறப்படும். ஆனால் வைதிகத்தின் அறிமுகம் இந்நிலையில் மாற்றங்களை உண்டுபண்ணியுள்ளது. தற்காலத்தில் குழந்தை பிறந்த நேரம், நாள் என்பன குறிக்கப்பட்டு ஜாதகம் எழுதுகின்ற மரபு பின்பற்றப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

#### *1.1.2* மருங்கை

குழந்தை பிறந்தது முதல் அதன் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு பலரும் தாய்க்கு உதவிசெய்வர். எனவே அவ்வாறு உதவுகின்றவர்களுக்கு நன்றி கூறும்முகமாக குழந்தையின் வீட்டாரால் விருந்தோம்பல் நிகழ்ச்சி நடாத்தப்படும். அதில் பிள்ளையின் பிறப்புக் கடமைகளில் ஈடுபட்டவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், குழந்தையின் நலன் விசாரித்தோர் ஆகியோருக்கு குழந்தை

பிறந்து முப்பதாம் நாளில் விருந்துபசாரம் வழங்கப்படும். பொதுவாக இன்றைய நாளில் கோயிலிற்குக் கொண்டு சென்று பிள்ளைக்கு தலைமுடி எடுப்பர். அத்துடன் இந்நாளில் பெண் குழந்தைகளுக்கு தோடு குத்துவதும் நடைபெறும். சித்தாண்டியில் இது 'மருங்கை' என அழைக்கப்படுகினற போதிலும் மட்டக்களப்பின் சில கிராமங்களில் 'முடியெடுத்தல்' எனப்படுகின்றது.

**1.1.3 பற்கொழுக்கட்டை சொரிதல்**

குழந்தை வளர்ந்து பல் முளைக்கத் தொடங்கியதும் பற்கொழுக்கட்டை சொரியும் நிகழ்வைச் செய்வர். முதலில் பிடி கொழுக்கட்டை செய்வர். ஒரு நல்ல நாளில் பிள்ளையின் தலையின் மேல் குடை பிடித்து, குடையின் மேல் வெள்ளைத் துணி விரித்து அதன் மீது அவற்றைச் சொரிவர். பெரும்பாலும் இதனை தாய் மாமனே செய்வர். இது குழந்தையின் வளர்ச்சியின் முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பின் சில பகுதிகளில் பிள்ளைப் பிறப்பின்போது உலக்கை எறிதல், தொட்டில் கட்டல் முதலான மரபுகள் காணப்படுகின்றபோதிலும் சித்தாண்டியில் இவை பின்பற்றப்படவில்லை.5

**1.2 ருதுவாதல்**

பெண்பிள்ளை வளர்ந்து வயதடைவது மட்டக்களப்பில் 'சாமர்த்தியமடைதல்' அல்லது 'பெரிய பிள்ளையாதல்' என அழைக்கப்படுகின்றது. இது பெண்ணாணவள் அறிவு முதிர்ச்சி பெறுகின்ற வயதாகக் கணிக்கப்படுகின்றது. அதன்காரணமாகவே சாமர்த்தியம் (திறமை) என்கின்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. பெண் வய தடைந்ததை அறிந்த தாய் உற்றார், உறவினருக்கு 'விசனம்' அனுப்புவாள். சோதிடரை அணுகி பெண் ருதுவான நேரத்தைக் கூறி, அதன்படி நல்ல நேரம் கணிக்கப்படும். குறித்த நேரத்தில் முதல் முழுக்கு நீராட்டப்படும். இது 'தண்ணீர் வார்த்தல்' எனப்படும். இதன்போது சுமங்கலியான தலைப் பிள்ளை ஆணாக உள்ள மாமி முறையானவள் முதற் தண்ணீர் வார்ப்பாள். பூப்படைந்த பெண் எதிர்காலத்தில் திருமணம் செய்து நீண்ட காலம் சுமங்கலியாக வாழவேண்டும் என்பதற்காக அவ்வாறான பெண்ணொருத்தியால் முதலாவது தண்ணீர் வார்க்கப்படுகின்றது. அத்துடன் அப்பெண்ணை திருமணம் செய்வதற்கான முதலுரிமையை அவளுடைய மாமியின் மகனே பெறுவான் ஆதலால் அவனது தாயான மாமிக்கு தண்ணீர் வார்த்தலின்போது முதலுரிமை வழங்கப்படுகின்றது. பின்னரே ஏனைய சுமங்கலிப் பெண்கள் தண்ணீர் வார்ப்பர்.

நீராட்டின் போது குரவை ஒலியைப் பெண்கள் எழுப்புவதுடன் வெடியொலியும் எழுப்பப்படும். இங்கு குரவை என்பது புராதன மட்டக்களப்பு தேசத்தவர் மத்தியில் காணப்படுகின்ற மரபாகும். பழந்தமிழிலக்கிய காலம் முதலாக குரவையிடும் முறை தமிழர்களிடையே காணப்பட்டமைக்கு சிலப்பதிகாரத்தில் வருகின்ற குரவைக்கூத்து சிறந்த சான்றாக அமைகின்றது.[4] இதன் எச்சமாகவே மட்டக்களப்புத் தமிழர்களிடையே காணப்படுகின்ற குரவையிடல் அமைகின்றது. அன்றைய தினம் 'மஞ்சள் ஊற்றும்' நிகழ்வும் நடைபெறும். இதன்போது மச்சாள், மச்சான் முறையானவர்கள் தங்களிடையே மஞ்சள் ஊற்றி விளையாடுவர். மஞ்சள் ஒரு மங்களப் பொருளாகக் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் கிராமங்களில் இன்றுவரை மஞ்சள் ஊற்றும் நிகழ்ச்சி நடைபெறுகின்றமை தமிழரிடையே காணப்படுகின்ற பண்பாட்டு ஒத்தியல்பைக் காட்டுகின்றது. பருவமடைந்த பெண்ணுள்ள வீட்டில் சலவையாளரால் (வண்ணான்) வீட்டின் வெளியே வெள்ளை கட்டப்படும்.

இரண்டாம் தண்ணீர் வார்த்தல் சோதிடர் கணித்த நாளில் கொண்டாடப்படும். இது 'சாமர்த்தியக் கலியாணம்' அல்லது 'பூப்புனித நீராட்டு விழா' என அழைக்கப்படும். வசதி படைத்தவர்கள் இவ்விழாவை ஊரை அழைத்து பெருவிழாவாகக் கொண்டாடுவர். ஆயினும் முற்காலத்தில் இரண்டாம் தண்ணீர் வார்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றபோதிலும் அது ஊரைக் கூட்டி பெரிய விழாவாகக் கொண்டாடப்படவில்லை. மட்டக்களப்பு தேசவழமையில் பிற்காலத்தில் ஏற்பட்டுக்கொண்ட மாற்றமே அது. வசதி படைத்தோர் தமது அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்காகப் பெருவிழாவாகக் கொண்டாடத் தொடங்கினரெனினும், இன்று சித்தாண்டியில் அனேகமாக இந்த நிகழ்ச்சி திருமணம் போன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

பூப்படைந்த பெண்ணுக்கு குறிப்பிட்ட ஒரு சில உணவு வகைகளையே வழங்குவர். நல்லெண்ணையுடனான உணவு அதிகளவில் வழங்கப்படும். முட்டை, எள்ளுருண்டை முதலிய உணவு வகைகளையே பெருமளவில் வழங்குவர். ஏனெனில் பூப்படைந்த பெண்ணிற்கு அதிகளவு போஷாக்கு இழப்பு ஏற்படுமாதலால் அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் போஷாக்கு நிறைந்த உணவுகள் வழங்கப்படுகின்றன. தொன்றுதொட்டு இவற்றில் பெருமளவில் மாற்றம் ஏற்படாது பேணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**1.3 இறப்பு மற்றும் அந்திமக்கிரியைகள்.**

பிறப்பைப் போன்றே இறப்பின் போதும் பல்வேறு மரபுகளை சித்தாண்டி மக்கள் பின்பற்றுகின்றனர். ஒருவர் இறந்தால் முதலில் அவரது உடலை குளிப்பாட்டப்பட்டு, ஆடைகளால் அலங்காரம் செய்வார்கள். செய்து முடித்தபின் இறுதி அஞ்சலிக்காக மக்கள் மத்தியில் சடலம் வைக்கப்படும். சடலத்தின் தலை தென்மேற்கே இருக்கத்தக்கதாக கட்டில் வைப்பர். சடலத்தின் தலை மற்றும் கால் பக்கங்களில் குத்து விளக்கினை ஏற்றி வைப்பார்கள். இறந்த வீட்டின் கூரைப்பகுதியில் வெள்ளைத் துணியை சலவைத் தொழிலாளி கட்டுவார். இதனை வெள்ளை கட்டுதல் என அழைப்பார்கள். சடலத்தினை அடக்கம் செய்யக்கொண்டு செல்வதற்காக வாளைக்குற்றி, தென்னோலை, மற்றும் மரத்தினால் கூடாரம் போன்ற அமைப்பினை தயார் செய்து கொள்வார்கள். இது கட்டில் கட்டுதல் எனப்படும். சடலத்தினை அடக்கம் செய்யக் கொண்டு செல்ல முன்னர் இறந்தவரைவிட வயதில் குறைந்த உறவினர்களால் அவருக்கு கால் கழுவுதல், வாய்க்கரிசி போடுதல் என்பன நடைபெறுவதுடன், தேவாரம், பெரிய புராணம் போன்றவையும் ஓதப்படும். இறந்தோரை கடவுளர்களாக வழிபடுகின்ற முதாதையர் வழிபாட்டு முறையை இங்கு அவதானிக்க முடிகின்றது. அதன்பின்னர் பூதவுடலினை கட்டிலில் வைத்து பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்வார்கள்.

இறந்த வீட்டில் துக்கத்தினை வெளிப்படுத்தும் நிகழ்வாக எட்டு நாட்கள் பல விடயங்களை மேற்கொள்வார்கள். முதலாம், இரண்டாம், மூன்றாம் நாட்களின் மாலையில் வளவின் தலைவாசலில் இல்லது கடப்படியில் இளநீர் வெட்டி வைக்கப்படும். மூன்றாம் நாள் பால், பழம் வைத்தல் மற்றும் பொங்கல் படைத்தல், எட்டாம் நாள் கல்லை வைத்தல், 31ஆம் நாள் கல்லை வைத்தல் என்பவை செய்யப்படும். எட்டு நாட்களும் துக்க வீட்டாருக்கு உணவினை அயலவர்களே கொடுப்பர். துன்பத்தில் இருக்கும் அவர்கள் உணவு தொடர்பில் சிந்திக்க மாட்டார்களாதலால் அவர்களின் நலன்களில் அக்கறை கொள்ளும் அயலவர்கள் உணவினை வழங்குவர். முப்பத்தொரு நாட்கள் செல்லும்வரை துக்க வீட்டினர் நற்காரியங்கள் மற்றும் கோயில் வழிபாட்டினையும் மேற்கொள்ளமாட்டார்கள்.

புரட்டாதி மாதத்தில் உத்தியாட்கள் எனப்படும் இறந்தவர்களுக்கு வழிபாடு செய்யப்படும். இரவு முதற் சாமத்தில் சோறு, கறி, தயிர், பழம், பலகாரம் முதலான பலவகை உணவுகளையும்படையல்வைப்பர். இதுகல்லை வைத்தல் எனப்படும். பொதுவாக ஐந்து கல்லை வைக்கப்படும். நீண்டகாலமாக இம்முறை காணப்படுகின்றபோதிலும் அவசர உலகில் அதற்கு நேரமில்லை என்று யோசிக்கின்ற மக்கள் தற்போது இவ்வாறில்லாது உத்தியாக்களின் ஆத்ம சாந்தி வேண்டி கோயிலில் பூசை கொடுப்பது வழக்கமாக உள்ளது.

### 1.4 திருமண நடைமுறைகள்

இல்லற வாழ்க்கைக்காக ஒரு ஆணையும் பெண்ணையும் வைபவ ரீதியாக இணைக்கும் நிகழ்ச்சி திருமணமாகும். திருமணச் சடங்குகள் பண்பாட்டுக்கு பண்பாடு வேறுபடும். ஒரு சமூகத்தினுடைய பண்பாட்டு முதிர்ச்சியை காட்டி நிற்பது திருமணச் சடங்குகளாகும். ஆரம்பகாலத்தில் இங்கு திருமணங்களானது பேச்சு வார்த்தைகள் மூலமே முடிவாகின. எனினும் இன்று காதல் திருமணங்களும், பேச்சு வார்த்தைகள் மூலமான திருமணங்களும் இடம்பெறுகின்றன. காதல் திருமணங்களில் சடங்குகள் பெரும்பாலும் நிகழ்த்தப்படுவதில்லை. பொதுவாக பேச்சு வார்த்தைகள் மூலமான திருமணங்களில் சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

### 1.4.1 மரபு ரீதியான திருமணங்கள்

திருமணமொன்றை நிச்சயிக்கமுன் ஆண், பெண் இருவீட்டாரும் தமது வசதிகளுக் குரியதான முறையில் பெண் அல்லது ஆண் வீட்டாரை தெரிவு செய்வார்கள். இதனடிப்படையில் ஆண், பெண் இருவருக்கும் திருமணப் பொருத்தம் பார்க்கப்படும். பொருத்தம் திருப்தியாக அமைகின்றவிடத்து பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று சம்பந்தம் பேசுவர். அதன்போது சீதனம் முதலான விடயங்கள் பேசி ஒத்துப் போகின்றவிடத்து திருமணத்துக்குரிய தினத்தினை இருவீட்டாரும் தீர்மானிப்பார்கள். திருமண தினத்தினை தமது வசதிக்கேற்ற முறையில் வீட்டிலோ, ஆலயங்களிலோ செய்யத் தீர்மானிப்பர். திருமணக் காலம் நெருங்கியதும் பெண்வீட்டார் கேட்டுப் போதல் எனும் சம்பிரதாயப்படி நெருங்கிய உறவினர்களுடன் தாம்பூல வட்டா, வாழைப்பழம், தேங்காய், மரக்கறிவகைகள், கொழுக்கட்டை, பணியாரம், முறுக்கு, தொதல் முதலான ஐந்து அல்லது ஏழு பெட்டிகள் கொண்டு செல்வர். இதனை பெட்டி கொண்டு செல்லுதல் என அழைக்கின்றனர். கொழுக்கட்டைப் பெட்டி கொண்டு செல்கின்றபோது ஒரு பெரிய கொழுக்கட்டையினைச் செய்து அதற்குள் தத்தமக்கான பொருளாதார நிலைக்கேற்ப மோதிரம் அல்லது நாணயக்குற்றி என்பவற்றை வைத்திருப்பர். இது 'மாப்பிள்ளைக் கொழுக்கட்டை' என அழைக்கப்படும். மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டார் கொண்டு வந்த பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களை கொண்டுவருவர். இவையே தேசவழமையாகும். ஆனால் பிராமணிய செல்வாக்குக் காரணமாக பொன்னுருக்கல் முதலான நிகழ்ச்சிகளும் பின்பற்றப்படுகின்றன. திருமணத்திற்கு முதல் உள்ள நல்ல நாளில் தாலிக்குப் பொன்னுருக்கல் நிகழ்வு மாப்பிள்ளை வீட்டில் நடாத்தப்படுவது பிற்கால வழமையாகும். பொதுவாக இப்பிரதேசத்தில் பிள்ளையார் தாலியே கட்டப்படுகின்றது. முற்காலத்தில் தாலிகட்டும் மரபு பேணப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் மேல்வருமாறு திருமண நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திருமண தினத்தன்று அதிகாலையில் மணமகனின் சகோதரியால் மணமகளுக்கும் மணமகளின் சகோதரனால் மணமகனுக்கும் 'பால் தப்புதல்' நிகழ்வு நடாத்தப்படும். அதன்பின் பெண் வீட்டார் மணமகனின் வீட்டுக்கு சென்று

மணமகனை அழைத்து வருவார்கள். பெண்ணின் வீட்டுக் கடப்படியில் கூறை, தாலிப்பெட்டி மறித்தலும், பெட்டிகள் கைமாறுதலும் நடைபெறும். அடுத்து மணமகளை அழைத்து வருவார்கள். இருவரையும் மணமேடையில் அமரவைத்து சில கிரியைகளை செய்விப்பார்கள். இக்கிரியைகளை செய்வதற்காக கோயிற் குருக்களை அல்லது பிராமணர்களையே தெரிவு செய்வார்கள். கிரியை முறைகள் நடத்திக்கொண்டிருக்கும் போது கூறை கொடுத்தல் எனும் நிகழ்வு நடாத்தப்படும். இது மணமகனுக்காக மணமகள் வீட்டாரும், மணமகளுக்காக மணமகன் வீட்டாரும் வாங்கிய ஆடைகளை மாற்றுதலாகும். இங்கு மணமகனுக்காக வேட்டியும், மணமகளுக்காக புடவையும் வாங்கப்படும். தாலி கட்டுதல் நிகழ்வின் போது இவ்வாடைகளையே மணமக்கள் அணிந்துகொள்வார்கள். பெண்ணின் தந்தை மணமகளை மாப்பிள்ளைக்கு கைப்பிடித்துக் கொடுப்பார். மேலும் பல கிரியைகள் செய்து முடிக்கப்பட்ட பின் மாலை மாற்றுதல், தாலி கட்டுதல் ஆகியவை இடம்பெறும். தாலி கட்டும் போது மணமகனின் சகோதரி முறையானவளே தாலியை பெண்ணுக்கு அணிந்து விடுவார். தாலியானது மஞ்சட் கயிறு, அல்லது தங்கத்தினால் செய்யப்பட்டிருக்கும். தாலியை தெரிவு செய்பவர்கள் இங்கு மணமகன் வீட்டாராகவே காணப்படுவர்.[6]

திருமண நிகழ்வின் போது அம்மி மிதித்தல், அருந்ததி எனும் நட்சத்திரம் பார்த்தல், கண்ணாடி பார்த்தல், பொட்டு வைத்தல், பால், பழம் உண்ணுதல், ஆசிர்வாதம் வழங்குதல் முதலான நிகழ்வுகள் இடம்பெறும். திருமணம் நிறைவு பெற்றவுடன் மணமக்களை மணமகளின் வீட்டுக்கு அழைத்து செல்வார்கள். அங்கு ஆராத்தி எடுத்தல், கால் கழுவுதல், 'கலத்தில் போடுதல்' எனும் நிகழ்வுகள் நடைபெறும். கலத்தில் போடுதல் என்பது மணமக்கள் இருவரும் உணவருந்துவதைக் குறிக்கும். இதன்போது வட்டி, சேருவக்கால் போன்ற பாத்திரங்கள் முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. எனினும் தற்போது அவற்றின் பயன்பாடு அருகிவிட்டது எனலாம். பின் விருந்துபசார நிகழ்வுகள் இடம்பெறும்.

திருமணம் நடந்து மூன்றாம் அல்லது ஐந்தாம் தினத்தன்று மணமக்கள் இருவரையும் மணமகனின் வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். இது 'கால் மாறிச் செல்லுதல்' என அழைக்கப்படும். திருமணமானது சித்திரை, ஐப்பசி, ஆனி போன்ற மாதங்களில் தவிர்க்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. இம்மாதங்களில் செய்யப்படும் திருமண வாழ்க்கையானது சிறப்பாக அமையாது, வாழ்க்கை தொடர்ந்து நிலைபெறாது என்ற எண்ணம் காணப்படுகின்றது.

### 1.4.2 மயிற்கட்டுத் திருமணம்

சித்தாண்டி ஸ்ரீசித்திரவேலாயுதர்கோயிலின் வருடாந்த மகோற்சவத்தின் பன்னிரண்டாம் நாள் முருகனுக்கும் வள்ளி தேவிக்கும் திருமணம் நடைபெறும். இது 'மயிற்கட்டுத் திருமணம்' எனப்படும். சித்தாண்டியில் புராதன காலம் முதலாக இந்த மரபைக் காணமுடிகின்றது. இந்நன்னாளில் சில அவசரத் திருமணங்கள் நடைபெறும். இவை பொதுவாக பேசி வைக்காத திடீர்த் திருமணங்களாகவே அமைகின்றன. இத்தகைய திருமணங்களில் எவ்வித சடங்குகளும் நடைபெறுவதில்லை. அன்றைய நாள் மாப்பிள்ளை பெண் வீட்டிற்குச் செல்லுதல் மட்டுமே நடைபெறும். பொதுவாக சித்தாண்டியில் ஒவ்வொரு மயிற்கட்டு நாளிலும் ஒரிரு திருமணங்களாவது நடைபெற்றுவிடுவது குறிப்பிடத்தக்கது.

### 1.4.3 சீதனம்

சீதனம் என்பது திருமணத்தின்போது மணமக்களுக்கு வழங்கப்படும் சொத்துக் களாகும். பொதுவாக பெண்வீட்டாரே இதனை வழங்குகின்றனர். சித்தாண்டிப் பிரதேசத்தில் பெரும்பாலும் சீதனமாக வீடு, காணி, வயல்

நிலங்கள், மந்தைக் கூட்டங்கள் போன்றன வழங்கப்படுகின்றன. இதுவே இப்பகுதி மக்களின் சொத்துக்களாகக் காணப்பட்டன. எனினும் தற்காலத்தில் பணம் மற்றும் வாகனங்கள் கொடுக்கும் முறையும் காணப்படுகின்றது.

### 1.5 குடும்பம்

இக்கிராமத்தில் குடும்ப அமைப்புக்களைப் பார்ப்போமானால், கருக் குடும்பம், கூட்டுக்குடும்பம் என்ற அமைப்பிலேயே காணப்படுகின்றது. குடும்பத்தின் தலைமைத்துவத்தினை ஏற்று நடத்துபவராக தந்தையும், அதற்கடுத்து தாயும் காணப்படுகின்றனர். குடும்பத்தின் வருமானத்தினை ஈட்டிக்கொடுப்பவராக தந்தையே காணப்படுகின்றார். சில தந்தையை இழந்த குடும்பங்களில் பெண்கள் தொழில்களைச் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். அண்மைக்காலமாக சில குடும்பங்களில் அரச தொழில்களில் உள்ளனர். குடும்பத்தின் வீடு, காணி போன்றவற்றை பெண் பிள்ளைகளுக்கும், வயல் நிலங்கள், வாகனங்கள், மந்தைகள் போன்றவற்றை ஆண் பிள்ளைகளுக்கும் கொடுக்கும் மரபும் இங்கு பின்பற்றப்படுகின்றது.

### 1.6 ஆடை அணிகலங்கள்

ஆரம்பகாலத்தில் ஆண்கள் வெள்ளை வேட்டியும் சால்வைத் துண்டினையுமே அணிவர். இவர்கள் மேற்சட்டை அணிவதில்லை. பெண்கள் கொசுவம் வைத்து புடவை உடுத்தும் வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். இவ்வாறான முறையினை இன்று வயதானவர்களிடம் மட்டுமே காணக்கூடியதாகவுள்ளது. பெண்கள் காதணிகள், வளையல்கள், போன்ற ஆபரணங்களை அணிவதுடன், ஆண்கள் கடுக்கன் எனும் காதணியினை அணியும் முறையும் காணப்பட்டது. திருமணமான பெண்கள் நெற்றியில் குங்குமத்தினால் பொட்டு வைத்துக் கொள்வர்.

### 02.சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில்

சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் மட்டக்களப்பு தேசத்துக்கோயிலாகவும் திருப்படைக் கோயிலாகவும் விளங்குகின்றது. ஆரம்பத்தில் இக்கோயிலை வேடரே ஆதரித்து வந்தனர். எனினும் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் அப்பொறுப்பை பூபால வன்னிமைக் குடி ஏற்றுக் கொண்டதாக அறிகின்றோம். அதன் பின்பு பழுகாமத்திலிருந்து வந்த அத்தியா குடியினரும், காரைதீவிலிருந்து வந்த வேட வேளாளர் குடியினரும் வன்னியருடன் சேர்ந்து வழிபடத் தொடங்கினர். இவர்களே இக்கோயிலை இன்று பரிபாலித்து வருகின்றனர்.

ஆதியில்இவ்விடத்தே கொத்துப்பந்தலிட்டு வேடரின் வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. காலப்போக்கில் கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், தம்ப மண்டபம், வசந்த மண்டபம், பரிவாரத் தெய்வங்களுக்கான கோயில்கள், கிரக சாந்திக் கோயில், ஐந்து நிலை இராச கோபுரம், வெளிப் பிரகாரத்தில் வள்ளியம்மை, தெய்வயானை அம்மன் கோயில்கள், குமார தெய்வத்திற்கான கோயில் என்பன கட்டப்பட்டுள்ளன[7] பொதுவாக இப்பகுதி மக்களது வாழக்கை முறைகள் சித்திரவேலாயுதர் கோயிலுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டதாகவே விளங்குகின்றது.

கோயில் நிர்வாகத்தைப் பொறுத்தரையில் வன்னியனார் முதன்மை பெறுகின்றார். அவருடன்இணைந்து கோயில்விடயங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் மட்டக்களப்பின் ஏனைய தேசத்துக் கோயில்களைப் போன்று வண்ணக்கர் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர். ஆயினும் மற்றைய கோயில்களில் தலைமைத் தானத்தை வண்ணக்கர் பெற, இங்கு அவ்விடத்தை வன்னியனாரே பெறுகின்றார். இங்கு வண்ணக்கர்கள் வெள்ளாள குலத்திலுள்ள ஏழு குடிகளில் ஏதாவதொரு குடியில், பொதுவாக அனைவராலும் மதிக்கப்படுகின்ற முதியவராக

இருப்பது வழக்கம். எனினும் தற்போது அத்தியா குடி, புதூர் குடி ஆகியவற்றிலிருந்து மட்டும் வண்ணக்கர் தெரிவுசெய்யப்படுவதைக் காணமுடிகின்றது. ஏனைய வெள்ளாளர் குடிகள் யாவும் கோயில் நடவடிக்கைகளில் முதன்மை பெறுகின்றனர். பரம்பரை முறையில் ஆலயத் தொண்டு புரிவோர் 'கோவிலார்' என்று அழைக்கப்படுவர். நைவேத்தியத்திற்குத் தேவையான அரிசியை இப்பிரிவிலுள்ள பெண்களே குற்றி வழங்குவர். இவர்கள் 'வட்டுக் குத்துவோர்' என அழைக்கப்படுவர். இங்கு பூ எடுப்போர், சங்கு ஊதுவோர், குருக்கள் போன்றோருக்கு முற்காலத்தில் நெல் வழங்கப்பட்டபோதிலும் தற்போது வேதனம் பணமாக வழங்கப்படுகின்றது.

கோயிலின் வருடாந்த உற்சவமானது ஆவணி பிரதமையில் ஆரம்பமாகி பௌர்ணமியில் முடிவடையும். இதில் 12ஆம் நாள் மயிற்கட்டுத் திருவிழா விசேடமானது[8] இறுதி நாளாகிய 16ஆம் நாள் சித்திரவேலாயுதர் தீர்த்தமாடுவதுடன், கோயிலுடன் இணைந்ததாகவுள்ள குமரத்தன் கோயிலில் தீப்பாய்தல் நிகழ்வு நடைபெறுவது மட்டக்களப்பில் உள்ள ஏனைய கோயில்களுடன் ஒப்பிடுகையில் வேறுபட்ட அம்சமாக அமைகின்றது. இது மட்டக்களப்பில் வேடுவர்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

### 03. சமயம்

சித்தாண்டியில் பெரும்பாலான மக்களும் இந்து சமயத்தினைப் பின்பற்றுபவர்களாக காணப்படுகின்றனர். அவர்களது குடியேற்றம் கோயிலை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்கள் ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாடுகளை ஆற்றிவருகின்றனர். அம்மன் ஆலயம் ஆகமம் சாராத முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் தேவாதிகள் ஆட்டுதல் (தெய்வம் ஆட்டுதல்) போன்றவை இடம்பெறுகின்றன. மேலும் தமது வீடுகளிலும் வைரவர், அம்மன், குமாரர் போன்ற தெய்வங்களுக்கான பந்தல்களை ஓலை, மரம், மற்றும் சீமெந்து என்பவற்றினால் அமைத்து வழிபடுகின்றனர். இத்தெய்வங்கள் தம்மை காப்பதாகவும் அவை தமக்கு வரும் துன்பம், நோய்கள் போன்றவற்றை தீர்ப்பதாகவும் நம்புகின்றனர். அவற்றுக்கு வருடத்திற்கொரு முறை பூசைகளையும் செய்கின்றனர். அவ்வாறு செய்யாவிட்டால் தமக்கு நோய் போன்ற பிணிகள் ஆட்கொண்டுவிடும் எனவும் தம்மை கடவுளர்கள் தண்டித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையும் இம்மக்களிடையே காணப்படுகின்றது.

### 04. விழாக்கள் மற்றும் பண்டிகைகள்

சித்தாண்டிப் பிரதேச மக்கள் பெரும்பாலும் இந்துக்களாக காணப்படுவதனால் பல்வேறு விழாக்கள், பண்டிகைகளை கொண்டாடுகின்றார்கள். தைப்பொங்கல் விழா, சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, கார்த்திகை விளக்கீடு போன்றவற்றைக் கூறலாம். விரதங்களாக கேதார கௌரி விரதம், கந்த சஷ்டி விரதம் போன்றவற்றை அனுஷ்டிக்கின்றனர். சித்தாண்டியைப் பொறுத்தவரை கந்த சஷ்டி விரதத்தின் இறுதி நாளான சூரன் போர் மிக விமரிசையாக நடாத்தப்படும். இவ்விரதத்தை கிட்டத்தட்ட 2000இற்கு மேற்பட்ட மக்கள் இங்க அனுஷ்டிப்பது சிறப்பம்சமாகும்.

புதிரெடுத்தல்: தை மாதத்து பூச நாளிலே சித்தாண்டி மக்கள் புதிரெடுக்கும் மரபைப் பேணுகின்றனர். ஊரிலுள்ள வெள்ளாளர் குலத்தைச் சேர்ந்த போடியார்களால் கோயிலிற்கு நெல் மூடைகள் வழங்கப்படும். பின்னர் பொதுமக்கள் தமது வீட்டில் உள்ள பழைய நெல் சிறிதளவை தட்டில் வைத்து அதனை கோயிலில் உள்ள தட்டுக்களில் கொட்டிவிட்டு புதிய நெல்லை கோயிலில் இருந்து வாங்கி வருவர். அவ்வாறு பழைய நெல் இல்லாதவர்கள் சிறிதளவு பூவைக் கோயிலில் கொடுத்துவிட்டு புதிர் வாங்குவர்.

அதனை சுவாமி அறையினுள் வைக்கும் நிகழ்ச்சி புதிரெடுத்தல் எனப்படும். தமது வயலில் அறுவடை முடிந்ததும் விளைந்த நெல்லின் அரிசியை தமக்கு உணவாக்கிக் கொள்ளும் முன்னர் கோயிலிற்கு புதிர் கொடுப்பர். புதிய அரிசியில் பூசை கொடுப்பதையே இது குறிக்கும்.

**05. நம்பிக்கைகள்**

இம்மக்கள் மத்தியில் ஏராளமான நம்பிக்கைகள் காணப்படுகின்றன. காகம் கரைந்தால் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும் என நம்புதல் அல்லது உறவினர் யாராவது வீட்டிற்கு வருவர் என எதிர்பார்த்தல், பல்லி விழுந்தால் அல்லது கீச்சிட்டால் அதற்கு ஒருவிடயத்தினைக் கூறுதல், கனவு கண்டால் அதற்கு பல்வேறு அர்த்தங்களை எடுப்பதோடு அவற்றிற்கான பரிகாரங்களையும் மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் இங்கு காணப்படுகின்றன. இம்மக்கள் சனி, புதன் கிழமைகளில் ஒரு இறப்பு ஏற்பட்டால் அதன் தொடர்ச்சியாக இன்னுமொரு இறப்பு ஏற்படும் என நம்புகிறார்கள். அவ்வாறு இறப்பு ஏற்பட்டால் பூதவுடலினை அடக்கம் செய்யும் போது அதனுடன் ஒரு முட்டை அல்லது தென்னங்கன்றினையும் வைத்து அடக்கம் செய்யும் முறை இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது.

அது மட்டுமல்லாது ஐப்பசி, ஆடி, சித்திரை போன்ற மாதங்களில் திருமணம் செய்யக்கூடாது என்ற நம்பிக்கையினையும், ஆடி மாதத்தில் இறப்பு ஏற்பட்டால் தீமை எனவும் நம்பிக்கை கொண்டுள்ளனர். பிரயாணங்களை மேற்கொள்ளும் போது சகுனங்கள் பார்த்துச் செல்லுதல், ஒரு விடயத்தினை அல்லது செயலினை செய்யும் போது நல்ல நேரம் பார்த்து செய்தல் போன்ற விடயங்களும் காணப்படுகின்றன. சாஸ்திரம், ஜோதிடம் முதலான விடயங்களிலும் இப்பிரதேச மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். தமது வீடுகள், கிணறுகள் வேறு கட்டிடங்களை நிர்மாணிக்கும் போதும் எத்திசை நோக்கி அமைய வேண்டும், எவ்வாறு அமைக்க வேண்டும் போன்றவற்றில் சாஸ்திரவிடயங்களை கைக்கொள்ளுகின்றனர். இப்பிரதேசத்தில் பில்லி, சூனியம், மந்திர விடயங்களில் நம்பிக்கைகள் கொண்டவர்களாகவே மக்கள் காணப்படுகின்றனர். செய்வினை, செய்வினைக்கான காய் வெட்டல் போன்றவை தொடர்பான நம்பிக்கைகளும் இம்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. நோய்கள் ஏற்படுகின்ற போது தண்ணீர் ஓதுதல், திருநீறு போடல், நூற்கட்டுதல் போன்றவற்றையும் செய்கின்றனர். அவ்வாறான விடயங்களை மேற்கொள்ளும் பூசாரிகள் இக்கிராமத்தில் உள்ளனர். நேர்த்திக்கடன் வைக்கும் பழக்கம் இம்மக்கள் மத்தியில் மிக அதிகமாகவே காணப்படுகின்றன. கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல் முதலானவை கைக் கொள்ளப்படுகின்றது.

**06. சாதியும் குடிமுறையும்**

ஓரிடத்தில் வாழ்ந்த ஆதிமனிதன் பின்னர் சமுதாயமாக வளரத் தொடங்கியதும் பிரிந்து செல்ல ஆரம்பித்தான். நாளடைவில் இவர்களிடையே ஏற்பட்ட தொழிற்பிரிவுகள் குலங்கள் தோற்றம் பெறக் காரணமாயிற்று. அவ்வவ் குலத்தின்கண் குடிப்பிரிவுகளும் தோன்றலாயின. காலப்போக்கில் அக்குலக் குடிப்பிரிவுகளுக்கு தலைவராக இருந்தவர்களின் பெயர்களில் அக்குடிகள் அழைக்கப்படலாயின. குடி எனும் சொல் மக்கள் வாழும் குடியிருப்பு களையும், சாதியையும் குறிப்பதாக இருப்பினும் மட்டக்களப்பு பிரதேசத்தில் குலத்தின் பிரிவுகளாகவே கொள்ளப்படுகின்றன.

சித்தாண்டியிலும் குடி வழக்கமுறைகள் காணப்படுகின்றன. இம்முறை தாய் வழியானதாகவே அமைகின்றது. குடி முறையமைப்பிலேயே சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயத்தில் திருவிழாக்கள் செய்யப்படுகின்றமை

குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு தினம் திருவிழாவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். இக்கிராமத்தில் சாதி அடிப்படையிலான தொழில் முறைகள் மேற்கொள்ளப்படுவதனையும் அவதானிக்கலாம். வண்ணார், அம்பட்டர் எனப்படும் ரதியினர் தத்தமக்குரிய தொழில்களைச் செய்ய ஏனையோர் விவசாயத்தை பெரும் தொழிலாக மேற்கொள்கின்றனர். இங்கு பெருமளவில் வாழ்வோர் வெள்ளாளர்களாவர். இவர்களிடையேஏழுகுடிகள்காணப்படுகின்றன. குடிகள் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுகின்ற போது வெள்ளாளர்களிடையே உள்ள ஏழு குடிகள் பற்றிக் கூறுகின்றது[9] அவற்றில் வருகின்ற குடிகளில் அத்தியாகுடி மட்டுமே சித்தாண்டியில் காணப்படுகின்றது. மேல்வருவன சித்தாண்டியில் காணப்படுகின்ற குடிகளாகும்.

1. வன்னிமைக் குடி
2. புதூர்க் குடி
3. அத்தியாகுடி
4. கங்காணிப்போடி குடி
5. பட்டினக்குடி
6. சந்தாப் பணிக்கன் குடி
7. பரமக் குட்டி குடி[10]

திருமண, மரணச் சடங்குகளின் போது அம்பட்டர், வண்ணார் ஆகியோருக்கு முதன்மை வழங்கப்படுகின்றது. இவர்கள் மேற்கூறப்பட்ட ஏழு குடிகளுக்கும் தொண்டூழியம் செய்பவர்களாக இருப்பதால் ஒரே நேரத்தில் சமபந்தி போசனம் செய்விப்பதனையும், சித்திரை வருடப் பிறப்பு, திருக்கார்த்திகை ஆகிய விசேட தினங்களில் இவ்விரு பகுதியினரையும் வீட்டிற்கு அழைத்து கைவிசேடம், வெகுமதிகள் என்பனவும் கொடுக்கப்படுகின்றன. வன்னிமைக் குடியினர் வீட்டில் விவாகமோ மரணமோ ஏற்பட்டால் இத்தொண்டூழியர்களுக்கு இருமடங்காக கொடுப்பனவுகளை முறைப்படி கொடுப்பர்.

**07. வன்னிமை**

வன்னியனாரின் குடிப்பெருமையை சித்தாண்டியில் நடைபெறும் கோயிற் கடமைகளிலும், விவாகம், மரணம் போன்ற நன்மை, தீமைகளிலும் காணலாம். கோயிற் கட்டியம் கூறும் போது தேசம், குருக்கள், வன்னிமை எனக் கூறுவர். இங்கு தேசம் என்பது அரசினையும், குருக்கள் என்பது குருவையும், வன்னிமை என்பது வன்னியனாரையும் குறிக்கும். கோயிலின் நிர்வாகத்திற்குத் தலைமை தாங்குபவராக இவர் விளங்குகின்றார். இவரது பரம்பரையினர் முல்லை நிலம் சார்ந்த பெருமாவெளி, கோராவெளி, பேரிலாவெளி ஆகிய இடங்களில் குடியிருந்து கோயிலை நிர்வகித்து வந்தனர்.

கோயிற் பூசையின் போது முதலில் இருபாகை முதன்மைக் குருக்களினால் விபூதி, தீர்த்தம், சந்தனம் என்பவற்றுடன் காளஞ்சு வழங்கப்பட்டு கௌரவிக்கப்படும். இதைவிட திருமண வைபவங்களில் திருமணப் பந்தலில் பாய் போட்டு வெள்ளை விரித்து பிரத்தியேகமாய் தண்ணீர் செம்பு, தாம்பூல வட்டா கொடுத்து கௌரவிப்பது இன்றும் நடைமுறையில் உள்ளது. தேசத்து வன்னிமை இவ்வைபவத்திற்குப் போகாதுவிட்டால் வன்னிமைக் குடியைச் சேர்ந்தவரில் முதியவர் ஒருவர் முதன்மையாக இருப்பார். மரண வீடுகளிலும் சவஅடக்கம் முடிந்து திரும்பி வந்ததும் உடை மாற்றும் போது தேசத்து வன்னிமைக்கு அல்லது வன்னிமைக் குடியில் ஒருவருக்கு முதலில் வெள்ளை கொடுப்பது மரபு.

கோயிற் திருவிழாவின் போது இவருக்கு மிகுந்த மரியாதை வழங்கப்படும். கோயிலிற்கு அவரை அழைத்து வருவதற்காக பெருமாவெளிக்கு அவரது வீடு தேடிச் செல்வர். தவில், குழல் வாசித்து அழைத்து வந்து பின் சிரம பரிகாரங்கள் செய்து விழாவிற்கு எழுந்தருளச் செய்வர். சுவாமி வீதி வலம்வரும் போது தேசத்து

வன்னிமை அணிந்துவரும் வெள்ளியினாலான தலைமுடி இன்றும் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் தற்போது இம்முறை அருகிச் சென்றுள்ள போக்கைக்காணமுடிகின்றது. முற்காலங்களில் இவர்கள் தமது குடிகளுக்குள்ளேயே மணத் தொடர்புகளைப் பேணிய போதிலும், பிற்காலத்தில்அத்தியாகுடி, புதூர்குடியினருடன் உறவாடி மணவினைத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

### 08. தொழில்

இப்பிரதேசத்தில் மக்கள் பல தொழில் களையும் மேற்கொள்பவர்களாகக் காணப் படுகின்றார்கள். விவசாயமே பிரதான தொழிலாக அமைகின்றது. இவர்கள் உம்மாரி (முன்மாரி), காலபோகம், இடைப்போகம் எனும் மூன்று போகங்களில் விவசாயம் மேற்கொள்கின்றனர். நெற்பயிர்ச்செய்கை, மந்தை வளர்த்தல், செங்கற் சுடுதல், சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் கூலித்தொழில் போன்றவற்றைச் செய்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் சாதி அடிப்படையிலான தொழில்கள் மேற்கொள்ளப்படுவதனை அவதானிக்க முடியும். உதாரணமாக வண்ணார் சமூகம் சலவைத் தொழிலையும், அம்பட்டர் சமூகம் முடிதிருத்துதல் தொழிலினையும் மேற்கொள்கின்றனர். எனினும் இவற்றில் இன்று சில மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது. சேனைப் பயிர்ச்செய்கையின் போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள். இங்கு சோளம், பயற்றை, வெண்டி, கத்தரி, நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன.

இப்பிரதேச மக்கள் மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளதனைக் காணமுடியும். பெரும்பாலானவர்கள் மாட்டுப் பட்டி வைத்துள்ளனர். தமது கால்நடைகளுக்கு குறியிடும் மரபும் இவர்களிடம் உண்டு.

புதூர்க் குடியினர் – ஏரி, இளம்பிறை

வன்னிமைக் குடி – பொழுது நிலவு

சந்தாப் பணிக்கன் குடி – கவுத்து மந்து

வண்ணார் – அடிகல்

அம்பட்டர் – கத்தரிக்கோல்

ஏனையோர் – இரட்டைத் தாமரை

### 09. மருத்துவ நடைமுறைகள்

இக்கிராமத்தில் சில நாட்டு மருத்துவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இது அதிகமாகக் காணப்பட்டது. அதாவது தலையிடி, தடிமன், காய்ச்சல் போன்றவற்றுக்கு சில கைமருந்துகளை இவர்கள் செய்வதினைக் காணலாம். இது போன்ற நோய்களுக்கு காய்ந்த இஞ்சியினை அரைத்து பூசுவது, தோடையிலை அல்லது தேயிலை போன்றவற்றை அவித்து ஆவிபிடித்தல் போன்ற செய்முறைகளினை மேற்கொள்கின்றனர். பாம்புக்கடிக்கு மருத்துவம் செய்யும் முறையினையும் இப்பிரதேசத்தில் காணலாம். பாம்புகடித்தால் அதற்கு மருத்துவம் செய்பவரைவிஷவைத்தியர்எனஇப்பிரதேசத்தில் அழைக்கின்றனர். அது மட்டுமன்றி எலும்பு முறிவுக்கான சிகிச்சையளிப்பவர்களும் இப்பிரதேசத்தில் உள்ளனர். பிள்ளைப்பேற்று மருத்துவச்சிகளும் உள்ளனர். எனினும் தற்காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி முறைகள் காரணமாக இவ்வாறான நடவடிக்கைகள் குறைந்துகொண்டு வருகின்றன. எனினும் விஷ வைத்தியம், எலும்பு முறிவு வைத்தியம் என்பன இன்றும் நிலைபெற்றுள்ளன.

### 10. கலை நிகழ்வுகள்

சித்தாண்டியில் கலை நிகழ்வுகள் பல காணப்படுகின்றன. கூத்து, கொம்புடைத்தல் போன்றவற்றினைக் கூறலாம். இவற்றுள் மழைவேண்டி நிகழ்த்தப்படும் கொம்புடைத்தல் நிகழ்வு சிறப்புடையதாகும்.

**10.1 கொம்புமுறி:**

மட்டக்களப்பு மக்களின் பாரம்பரிய பொழுதுபோக்குகளில் ஒன்றாக கொம்பு விளையாட்டு அமைகின்றது. ஆனால் இது வெறும் விளையாட்டு மட்டுமின்றி தெய்வ வழிபாட்டு முறையாகவுமே இங்கு பேணப்படுகின்றது. இதன் தோற்றமானது கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. மதுரை நகரின் இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் கண்ணகியின் சீற்றத்தைத்தணிப்பதற்காக மஞ்சள் கொம்பெடுத்து முதன்முதலில் விளையாடினர் என்பது ஐதிகம். முற்காலங்களில் இந்நிகழ்வு வருடந்தோறும் நடைபெற்று வந்துள்ள போதிலும் பின்னர் மழை வேண்டி மற்றும் நோய்நொடி நிவாரணம் வேண்டி கண்ணகிக்கு நேர்த்தி வைத்து கொம்பு விளையாடும் மரபு காணப்பட்டது. மட்டக்களப்பில் கொம்பு விளையாட்டு நடைபெறும் ஊர்களில் வடசேரி, தென்சேரி எனும் இரு பிரிவுகள் காணப்படும். புராதன காலத்தில் புவியியல் அடிப்படையில் ஊர் பிரிக்கப்பட்டு, பின் அது மரபுரீதியான பிரிவாக மாறிக் கொண்டது எனலாம். மட்டக்களப்பில் பாரம்பரிய கலாசார முதுசங்களெல்லாம் தாய் வழியானதாக அமைய, சேரியானது தந்தை வழியானதாக அமைகின்றது.

கொம்பு விளையாட்டின் போது கொம்பு, பில்லி, அடை, ஆப்பு, நெஞ்சடிப்பலகை, தாய்மரம், செவ்வாய்கதுற்றி, மரவளையம், செவ்வாய்க் குற்றி வளையம், அரிப்பு, வடம் தாங்கி, வடம் முதலானவை பயன்படுத்தப்படும். கொம்பு விளையாட்டிற்கான முன்னேற்பாடாக போர்தேங்காய் உடைத்தல், வெற்றிக் கொம்பு முறித்தல், வசந்தன் ஆடல், ஏடகம் கட்டி ஊர் சுற்றல், கொம்புக்கு கிரியை செய்தல், கொம்புத் தட்டெடுத்தல், வசை பாடல், குளிர்த்தி ஆடல் ஆகியன மேற்கொள்ளப்படும். முதலில் கொம்பு முறி விளையாடுவதற்கான நாளொன்றை தீர்மானிப்பதுடன், போர்த் தேங்காய் உடைக்கும் சிறுவர்களையும் தெரிவு செய்வர். இருசேரிகளும் தலா பதினைந்து தேங்காய்கள் கொண்டு தேங்காய்ப் போர் புரிவர். முதல் நாள் பூசையில் இருசாராரும் ஒவ்வொரு கொம்பெடுத்து கருவறையில் நேர்த்தி வைப்பர். ஏடகம் எனப்படும் தூக்கிச் செல்லக் கூடிய தேரொன்றை இரு சேரிகளைச் சேர்ந்தவர்களும் அமைப்பர். ஏடகத்தில் வைக்கப்படும் கொம்பு ஆரம்பத்தில் நேர்த்தியாக வைத்த கொம்பாகவோ வேறு கொம்பாகவோ இருக்கும். இந்த ஏடகக்கொம்பு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். தாய்க்கொம்பிற்கு மந்திர உச்சாடணம் செய்யப்படுவதும் நடைபெறும். இந்த மந்திரச் சடங்கிற்குப் பின் பில்லியுடன் அதை வரித்து கொம்பு கட்டும் இடத்திற்குக் கொண்டுவருவர். இது ‘கொம்பு தட்டெடுத்தல்’ எனப்படும். இதைத் தொடர்ந்து இரண்டு கொம்புகளை ஒன்றோடொன்று கொழுவி கொம்பு முறிப்பர். முதல் நாள் பூசை முதல் இறுதி கொம்பு வரையும் தென்சேரிக் கொம்பை வெல்லவைக்கும் முயற்சியே நடைபெறும். ஏனெனில் இதுவே கண்ணகிக்குரிய சேரியாகும்.

மேல்வரும் ஒழுங்கில் இந்த நிகழ்ச்சி நடாத்தப்படும்.

- பொருட்களை தேடி எடுத்தலும் தயார் படுத்தலும் - கொம்பு விளையாட்டுத் தொடங்குவதற்கு ஒரு வாரத்தின் முன்பே இதற்குரிய மரம், கொடிகள் என்பன தேடி எடுக்கப்படும்.
- கொம்பு தூது பிடித்தல் - இரு சேரியாரும் இணைந்து கொம்புகளை பொருந்தச் செய்வர். இதன் போது இரண்டு கொம்பு களினதும் அளவு, வகை என்பன ஆரா யப்படும்.
- கொம்பு வரிதல் - கொம்பு தூது பிடித்த பின்னர் கொம்பு கட்டுவதற்கு முதல் நாள் இரவு அவற்றை நீரினுள் அமிழ்த்தி ஈரமண்ணில் புதைத்து வைப்பர். அடுத்த நாள் அதிகாலையில் ஆத்தி நாரால்

திரித்தெடுக்கப்பட்ட புரியைக் கொண்டு கொம்புகளை பில்லியுடன் இணைப்பர்.

- அரிப்பு வளைத்தல் - கொம்பு வரிந்த பின் பிற்பகலில் கொம்பு கட்டுகின்ற மரத்தடிக்கு அது கொண்டு செல்லப்படும். இரு சேரியாரும் அரிப்பின் அளவைத் தீர்மானித்ததன் பின்னர் இரண்டு தடிகள் நிலத்தில் அடித்து இறுக்கப்படும். இவ்வாறு செய்யப்பட்ட இரண்டிடங்களில் இரண்டு சேரியாரும் அத்தடிகளை வைத்து வளைத்து இறுக்கமாக அரிப்பு வளைப்பர்.
- கொம்பு பூட்டுதல் - அரிப்பு இடப்பட்ட கொம்புகள் இரண்டும் பூட்டப்படும். அதாவது கொம்போடு இணைத்து வரியப்பட்ட பில்லிக்கும் அரிப்புக்கும் மேலே கொம்புத் தலைக்கிடையே மற்றவர் கொம்மை புகுத்தி இறுக்கமாகப் புணரச் செய்வர்.
- அடை கட்டுதலும், ஆப்படித்தலும் - கொம்புகளின் பூட்டு விலகாதிருக்க பில்லிகளுடன் இணைத்து அடைகட்டும் வேலை நடைபெறும்.
- கொம்புகளை தாய் மரத்துடனும செவ்வாய்க் குற்றியுடனும் இணைத்தல் - தாய் மரத்திற்கு முன்பு ஐந்து முழமளவில் செவ்வாய்க் குற்றி நாட்டப்பட்டு தாய் மரத்தில் சார்த்தி வைக்கப்படும். இதன்பின் அடைகளுடன் இணைக்கப்பட்ட கொம்புகளை தாய் மர வளையத்துடனும் செவ்வாய்க் குற்றி வளையத்துடனும் இணைப்பர்.
- அடை பிடித்தலும் வடம் பிடித்தலும் - பின் செவ்வாய்க் குற்றியின் மேல் பகுதியில் கொழுவியிருக்கும் வடத்தைப் பிடித்து இருசேரியாரும் முற்பக்கம் நோக்கி செவ்வாய்க் குற்றியை இழுப்பர். அவ்வாறு இழுக்கும் போது தாய் மரத்தின் இடது பக்கமாகவுள்ள வடத்தை வடசேரியாரும் வலது பக்கமாவுள்ள வடத்தை தென்சேரியாரும் இழுப்பர். கொம்பிழுக்கும்போமு அடைகள் விலகாதிருக்க தலா எட்டுப்பேர் அடை பிடிப்பர்.
- வெற்றி, தோல்வி தீர்மானித்தல் - கொம்பு விளையாட்டில் யாருடைய கொம்பு முறிகின்றதோ அவர் தோற்றவராவார். முறியாத கொம்பு வெற்றிக் கொம்பாகும். இரண்டு கொம்புகளும் முறியாத நிலையில், அந்நிலை ஏற்படுவதற்கு யார் காரணமாக இருந்தனரோ அவர்கள் தோற்றவர்களாகக் கருதப்படுவர்.[11]

சித்தாண்டியில் பேணப்படுகின்ற பல பண்பாட்டம்சங்கள் மட்டக்களப்பு பிரதேசத்திற்கு பொதுவானவையாகக் காணப்படுகின்ற போதிலும், சில அம்சங்கள் இவ்வூரிற்கே உரித்தான தனித்துவமானவையாக அமைகின்றன. எனவே தொன்மைமிக்க தமிழ் பண்பாட்டின் தனித்துவமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சித்தாண்டித் தமிழரின் பண்பாடு ஆராயப்படுவதனூடாக மட்டக்களப்புத் தமிழரின் சிறப்பு மிக்க பண்பாடு வெளிவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**அடிக்குறிப்புகள்**


1. http://ta.wikipedia.org/s/4my
2. பக்தவத்சல பாரதி, 2005, மானிடவியல் கோட்பாடுகள், புதுவை: வல்லினம் பதிப்பகம்.
3. திருக்குறள்- பண்புடைமை, கு.எண். 996, அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
4. சிலப்பதிகாரம்

5. எஸ்.தில்லைநாதன், 2006, மட்டக்களப்பில் இந்துசமய கலாசாரம், மணிமேகலைப் பிரசுரம், பக்: 76-77

6. மேலது, பக்: 83-98

7. கந்தையா வீ.சி, 1997, மட்டக்களப்புச் சைவக் கோயில்கள், இந்து சமய கலாசாரம் அலுவல்கள் திணைக்களம், இரண்டாம் பதிப்பு பக். 83 - 87

8. மேலது, பக். 83 - 87

9. மட்டக்களப்பு மான்மியம், பதிப்பு: F.X.C.நடராசா, மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை, 1998, ப. 104

10. தங்கேஸ்வரி.க, 2003, "கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்கள்", சிறப்பு மலர்-இரண்டாவது உலக இந்து மகாநாடு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் -கொழும்பு, பக். 51-63

11. மகேஸ்வரலிங்கம்.க, 2008, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், தொகுப்பு- க.இரகுபரன், கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு.